# ஒன்பதாம் வகுப்பு தமிழ் இலக்கணம்

## தொடர் இலக்கணம்

# தொடர் இலக்கணம்

சொற்கள் ஒன்றுடன் ஒன்று பொருள் தரும் முறையில் தொடர்வது **தொடர்** ஆகும். தொடர் **வாக்கியம்** என்றும் வழங்கப்படுகிறது.

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்ற மூன்று உறுப்புகள் இணைந்து தொடர் அமையும்.

எழுவாய் என்பது பெயர்ச்சொல்.

பயனிலை என்பது வினைச்சொல்

எழுவாய்க்கும், பயனிலைக்கும் இடையில் செயப்படுபொருள் வரும்

# தொடர் அமைப்பு

கண்ணன் பாடினான் → எழுவாய் கண்ணன் | பயனிலை பாடினான்

கண்ணன் பாடலைப் பாடினான் → எழுவாய் கண்ணன் | செயப்படுபொருள் பாடலை | பயனிலை பாடினான்

பாடலைக் கண்ணன் பாடினான் → செயப்படுபொருள் பாடலை | எழுவாய் கண்ணன் | பயனிலை பாடினான்

பாடினான் கண்ணன் பாடலை → பயனிலை பாடினான் | எழுவாய் கண்ணன் | செயப்படுபொருள் பாடலை

ஒரு சில இடங்கள் தவிர ஒரு சொற்றொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இந்த வரிசையில் தான் வர வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை இது தமிழ் தொடர் அமைப்பின் சிறப்பு

## எழுவாய்

- தொடர் எழுதக் காரணமாக உள்ள பெயர்
- யார்? எது? எவை? ஆகிய வினாக்களுக்கு விடையாக வரும்

## செயப்படுபொருள்

- எழுவாய் செய்யும் செயலை ஏற்கும் சொல்
- யாரை? எதை? எவற்றை? ஆகிய வினாக்களுக்கு விடையாக வரும்

## பயனிலை

- எழுவாய் செய்யும் தொழிலைக் காட்டி தொடரின் பொருளை முடித்து நிற்கும் சொல்

# தோன்றா எழுவாய்

எழுவாய் மறைந்து வருவது





இதில் **அவள்** என்னும் எழுவாய் வெளிப்படையாகத் தெரியவில்லை


# வினைப்பயனிலை

வினைமுற்று
பயனிலையாக
வருவது




இதில்
வரைந்தேன்
என்னும்
வினைமுற்று
பயனிலையாக
வந்துள்ளது


பெயர்ப்பயனிலை
பெயர்ச்சொல் பயனிலையாக வருவது
சொன்னவள் கீதா
இதில் கீதா என்னும் பெயர்ச்சொல் பயனிலையாக வந்துள்ளது
வினாப்பயனிலை
வினாச்சொல் பயனிலையாக வரும்
விளையாடுபவன் யார்?
இதில் யார்? என்னும் வினாச்சொல் பயனிலையாக வந்துள்ளது


அடைமொழி
ஒன்றைச் சிறப்பிப்பதற்காகக் கூறுவது அடைமொழி
பெயரடை
எழுவாயாக வரும் பெயர்ச்சொல்லுக்கு அடையாக வரும்
நல்ல நூல் படித்தேன்
பெயரடை
வினையடை
வினைப் பயனிலைக்கு அடையாக வரும்
இராமன் வேகமாக ஓடினான்
வினையடை

# வினைவகைகள்

## தன்வினை

எழுவாய் ஒரு வினையைச் செய்தால் அது தன்வினை

கனி மொழி கற்றாள்

## பிறவினை

எழுவாய் ஒரு வினையைச் செய்ய வைத்தால் அது பிறவினை

கனி மொழி கற்பித்தாள்

| தன்வினை | பிறவினை |
|---|---|
| நடந்தான் | நடத்து |
| அடங்கு<br>திருந்தினான் | அடக்கு<br>திருத்தினான் |
| ஆடினான்<br>மாறுவாள் | ஆட்டினான்<br>மாற்றுவாள் |
| செய்தான்<br>வா | செய்வித்தான்<br>வருவித்தார் |
| காண்<br>ஆடு | காட்டு<br>ஆட்டு |

# தொடர் வகைகள்

| | |
|---|---|
| எழுவாய்த் தொடர் | மன்னன் வந்தான் |
| வினைமுற்றுத் தொடர் | வந்தான் மன்னன் |
| வேற்றுமைத் தொடர் | அண்ணனோடு வருவான் |
| விளித் தொடர் | நண்பா கேள் |
| தெரிநிலை வினையெச்சத் தொடர் | உண்ணச் சென்றான் |
| குறிப்பு வினையெச்சத் தொடர் | நன்கு பேசினான் |
| தெரிநிலைப் பெயரெச்சத் தொடர் | பாடும் குயில் |
| குறிப்புப் பெயரெச்சத் தொடர் | இனிய காட்சி |
| அடுக்குத் தொடர் | வா வா வா |

# பயன்பாட்டுத் தொடர்கள்

## தன்வினைத் தொடர்

எழுவாய் ஒரு செயலைச் செய்வதைக் குறிக்கும் தொடர்

சமந்தா கற்றாள்





## பிறவினைத் தொடர்

எழுவாய் ஒரு செயலைச் செய்ய வைப்பதைக் குறிக்கும் தொடர்

சமந்தா கற்பித்தாள்

# பயன்பாட்டுத் தொடர்கள்

## செய்வினைத் தொடர்

- எழுவாய், செயப்படுப்பொருள், பயனிலை என்ற வரிசையில் அமைந்திருக்கும் தொடர்
- செயப்படுப்பொருளோடு 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்பட்டோ மறைந்தோ வரும்

கவிதா உரைப் படித்தாள்

## செயப்பாட்டு வினைத் தொடர்

- செயப்படுப்பொருள், எழுவாய், பயனிலை என்ற வரிசையில் அமைந்திருக்கும் தொடர்
- எழுவாயோடு 'ஆல்' என்னும் வேற்றுமை உருபு சேர்ந்து வரும்
- பயனிலையோடு 'படு' அல்லது 'பட்டது' சேர்ந்து வரும்

உரை கவிதாவால் படிக்கப்பட்டது



# பயன்பாட்டுத் தொடர்கள்

## உடன்பாட்டு வினைத் தொடர்

நேர்மறைப்பொருளில்
வரும் தொடர்

குமரன் மழையில்
நனைந்தான்



## எதிர்மறை வினைத் தொடர்

எதிர்மறைப் பொருள்
தரும் சொல்
இடம்பெற்றுள்ள
தொடர்

குமரன் மழையில்
நனையவில்லை



# பயன்பாட்டுத் தொடர்கள்

## செய்தித் தொடர்

செய்தியை வெளிப்படையாகக் காட்டக்கூடிய தொடர்

என் அண்ணன் நாளை வருவான்


திருச்செந்தூர், வந்தவாசி சட்டப்பேரவை தொகுதிகளில்
டிசம்பர் 19ல் இடைத்தேர்தல்

## உணர்ச்சித் தொடர்

உள்ளத்தின் உணர்ச்சியைத் தெரிவிக்கும் தொடர்

எவ்வளவு உயரமான மலை!



# பயன்பாட்டுத் தொடர்கள்

## வினாத்தொடர்

வினா
சொல்லும்
வினாக்குறியும்
இடம்பெற்றுள்ள
தொடர்

ஓடியது யார்?



## கட்டளைத்தொடர்

விதித்தல் பொருள்
இடம்பெற்றுள்ள
தொடர்

அமைதியாக இரு



sns academy
a fingerprint school

SNS INSTITUTIONS

# பயன்பாட்டுத் தொடர்கள்

## பெயர்ப்பயனிலைத் தொடர்

பயனிலை வரும் இடத்தில் பெயர்ச்சொல் அமைந்திருக்கும் தொடர்

இவர் காவலர்



sns academy
a fingerprint school

SNS INSTITUTIONS

